ௐ

ஓம்

ஸ்ரீ குருப்யோ நம :

# ஸ்ரீ ஸ்வாமீ சித்பவாநந்த ஆச்ரமம்

## வேதாந்த சாஸ்த்ர ப்ரசார ட்ரஸ்ட்

(பதிவு எண்: 226 / 1992)




சத்திரப்பட்டி சாலை,
வேதபுரீ, தேனி. - 625 531






ஓம்

ஸ்ரீ குருப்யோ நம:

# உள்ளம் தோறும் வள்ளுவம்

## வள்ளுவம் வழங்கும் வாழ்வியல்
## ஸனாதன நெறியில் வள்ளுவம்

## அறத்துப்பால்

# ஸ்ரீஸ்வாமீ பூர்ணாநந்தர்

பூஜ்யஸ்ரீ ஓங்காராநந்த மஹாஸ்வாமிகளின் சீடர்



நாள் :
11, புரட்டாசி 2025

Date:
28, September 2025

www.vedaneri.org

வகுப்பு 06



பாயிரம்

## அதிகாரம் : 3

# நீத்தார் பெருமை

## நீத்தார் பெருமை - துறவியர் மேன்மை

அறம் முதலானவற்றை எடுத்துக்கூறும் குருமார்களின் உயர்வு கூறுதல். அல்லது வாழ்வின் இறுதியான மேலான (பரமபுருஷார்த்தம்) குறிக்கோள் முக்தி நிலை. அதை அடைவதற்கான உபாயம் துறவு. அறம் பொருள் இன்பம் நிலைத்தற்கு ஹேது மழை. வீடு நிலைத்தற்குக் ஹேது துறவு. எனவே இது வான்சிறப்பின் பின் வைக்கப்பட்டது.







நீத்தார் = துறந்தார் = ஸந்ந்யாஸிகள் = யான், எனது எனும்
அபிமானத்தை (பற்றினை) முற்றிலும் விட்டவர்கள்.
பெருமை = சிறப்பு = மேன்மை

நீத்தார் பெருமையே சிறந்தது. (1-3)
நீத்தார் பெருமைக்குக் காரணம் (4 - 7)
நீத்தார் வலிமை (8, 9)
எல்லா உயிர்களிடமும் அருளுடையவர் (10)

# நீத்தார் பெருமையே பெருமை

1. உயர்ந்தன பலவற்றுள்ளும் உயர்ந்தது.
2. அளவிட முடியாதது.
3. துறந்தார் பெருமையே உலகில் சிறந்தது. (துறவுக்குக் காரணம்)




# பெருமைக்குக் காரணம்

4. பொறிகளைக் கட்டுப்படுத்தியது.
5. பொறிகளை வென்றது.
6. செயற்கரிய செயல் செய்தது (பொறிகளையும், மனதையும் அடக்கியது - யோக ஸாதனை)
7. விவேகம் (காரண காரிய விவேகம் - தத்துவஞானம்)









# நீத்தார் ஆணை (சக்தி)

1. மந்த்ர வாக்கு (உறுதியாக பலனைத் தரும் ஸத்யவாக்கு)
2. ஸத்யமான செய்கை

# பயன் - நன்மை

1. எல்லா உயிர்களிடத்தும் அருளுடையவர்

# நீத்தார் இலக்கணம்

1.ஒழுக்கத்து நீத்தார்

2.துறந்தார்

3.இருமை வகை தெரிந்தார் (நித்ய அநித்ய விவேகம்)

4.ஓரைந்தும் காப்பான் (வைராக்யம்)

5.ஐந்தவிந்தான்

6.செயற்கரிய செய்த பெரியர் - (யோகாப்யாஸம்)

7.(சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற) ஐந்தின் வகை தெரிவான் (மெய்ஞானம் உடையவர்)

8.நிறைமொழி மாந்தர்

9.குணமென்னும் குன்றேறி நின்றார்

10.அந்தணர் (அருளுடையவர்)



# 1. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து வேண்டும் பனுவல் துணிவு

“தனது ஒழுக்கத்தின்படி வாழ்ந்து பிறகு வாழ்க்கையை துறந்தவர்களுடைய சிறப்பே சிறந்த பொருள்கள் பலவற்றுள்ளும் சிறந்தது” என்பது (சிறந்த பொருள்கள் பலவற்றுள்ளும் சிறந்தது எது? எனக் கூற விரும்பும்) அறநூல்களது உறுதியான கருத்தாகும்.

துணிவு = உறுதியான முடிவு.

ஒழுக்கம் = அதுவரை வாழ்ந்த வாழ்க்கையில் கடைப்பிடித்த அறம் - ஸ்வதர்மம்

பனுவல் = பல்வேறு ஸமய நூல்கள்



## 2. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
## இறந்தாரை எண்ணிக்கொண் டற்று.


(யான், எனது எனும் இருவகைப் பற்றினையும் விட்ட) துறவிகளுடைய சிறப்பினை இவ்வளவு என்று எண்ணிக் கூறமுற்பட்டால் (அளவுபடாமையால் அது) இந்த உலகத்தில் இதுவரை பிறந்து இறந்தவர்களை இவ்வளவு என்று எண்ணியறிய முயற்சிப்பது போலாகும்.

துறந்தவர் சிறப்புகள் அளவிடற்கரியவை என்பது கருத்து.



## 3. இருமை வகைதெரிந்து ஈண்டறம் பூண்டார்
## பெருமை பிறங்கிற்று உலகு.

(பிறப்பு, வீடு எனும்) இரண்டினது (துன்ப இன்ப) வேறுபாட்டினை (கற்று, கேட்டு) அறிந்து இப்பிறப்பிலேயே (பிறவியிலிருந்து விடுபடுவதற்கான ஸாதனைகளை மேற்கொள்வதற்காக) துறவறம் மேற்கொண்டவர்களது மேன்மையே இவ்வுலகத்தில் சிறந்ததாகும்.



இருமை வகை = இரண்டு வகை (குளிர்வெப்பம், இரவு பகல், பிறப்பு இறப்பு, இன்பம் துன்பம் என நேரெதிராக இருக்கும் உலக வாழ்க்கையின் இருமுனைகள் அல்லது பிறப்பு - வீடு எனும் இரண்டு)

துறவுக்குக் காரணம் (நித்ய அநித்ய விவேகம்) கூறப்பட்டது.



## 4. உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
## வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.

மனதைச் சார்ந்து இயங்குகின்ற பொறிகளாகிய யானைகள் ஐந்தையும் (தத்தம் புலன் வழிச்செல்லாமல்) உறுதியான அறிவு எனும் அங்குசத்தினால் கட்டுப்படுத்துபவன் மேலானதான மோக்ஷ நிலத்திற்கு விதையாவான்.





உரன் = திண்மை = அறிவு

அங்குசம் = யானையைக் கட்டுப்படுத்தும் கருவி.

ஐந்து = ஐந்து பொறிகள் = காது, தோல், கண், நாக்கு, மூக்கு எனும் ஐந்து அறிவுக் கருவிகள். (பஞ்ச ஞான இந்த்ரியங்கள்)


புலன்கள் = ஒலி, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் (சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம்)

வரன் = மேலானது

வைப்பு - நிலம்

தமம் (பொறியடக்கம்), சமம் (மனவடக்கம்) உடையவன் முக்தியடைவதற்குத் தகுதியுடையவன் என்பது கருத்து.

விவேகத்தினால் வைராக்யம். வைராக்யத்தினால் சமம், தமம்.



## 5. ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான் இந்திரனே சாலும் கரி.



ஐந்து பொறிகளையும் வென்ற துறவியினது (சாப அனுக்ரஹ) வலிமைக்கு அகன்ற தேவலோகத்தில் உள்ள தேவர்களுக்கு அரசனான இந்த்ரனே (சாபம் பெற்றதன் வாயிலாக) மேலான சான்று ஆவான்.



பொறிகளை வென்ற துறவியான கௌதம முனிவரால் சாபம் பெற்றான் தேவர்களுக்குத் தலைவனாகிய இந்த்ரன்.
இது புலனடக்கம் மிக்க துறவியின் வலிமையைக் காட்டுகிறது.

விஷயங்களைத் துறந்து பொறிகளை அடக்குபவர்க்கு சாப அநுக்ரஹ சக்தி உண்டாகும் எனும் அவாந்தர பலன் கூறப்பட்டது.

# 6. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர் செயற்கரிய செய்கலா தார்.

(கிடைத்தற்கரிய மனித உடலை எடுத்திருக்கின்ற ஜீவர்களுள் மனம் விரும்பியபடியே பொறிகளை புலன்களின் வழியே செல்லவிடாமல் தடுத்து நிறுத்துகின்ற) செய்வதற்குக் கடினமான செயலைச் செய்பவர்கள் பெரியோர் ஆவர். செய்வதற்குக் கடினமான பொறிகளை அடக்குதலைச் செய்ய முடியாமல் (பொறிவழிச் சென்று உலக வாழ்க்கை) வாழ்பவர்கள் சிறியோர் ஆவர்.



செயற்கரிய செயல் = மனதையும் புலன்களையும் அடக்குதல்.

போகவாழ்க்கை வாழ்தல் எளிது. யோகவாழ்க்கை வாழ்தல் அரிது.

மனிதப் பிறவியின் பயன் பிறவாநிலை எனும் வீடுபேறடைதல். அதற்கான தவவாழ்க்கையை வாழாத மனிதர்கள் மனிதப்பிறவியை வீணாக்குதலால் அறியா சிறியர் ஆவர்.







# 7. சுவையொளி ஊறோசை நாற்றம்என் றைந்தின் வகைதெரிவான் கட்டே உலகு.



சுவையும் ஒளியும் ஊறும் ஓசையும் வாஸனையும் ஆகிய ஐந்து (பொறிகளின் விஷயங்களாகிய) புலன்களின் மூலங்களை அறிந்தவனுடைய அறிவிலேயே உலகமானது இருக்கிறது.



பஞ்சவிஷயங்களும் பொறிகளும் பஞ்சபூத கார்யங்கள் ஆகும். பஞ்சபூதங்களும் பரம்பொருளின் கார்யம் ஆகும். பரம்பொருள் ஒன்றே பஞ்சபூதங்களாகவும் விஷயங்களாகவும் அதை அனுபவிக்கின்ற உடல்களாகவும் ஜீவன்களாகவும் ஆகியிருக்கின்றது என்று அறிபவன் தனக்கு அந்நியமாக உலகைக் காண்பதில்லை.

நான்கு பாட்டாலும் (4 - 7) துறவிகளின் பெருமைக்குக் காரணம் ஐம்பொறிகளை அடக்கலும் யோகஸாதனைகளும் தத்வஞானமும் ஆகும் என்பது கூறப்பட்டது.



▶▶▶▶

# 8. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டி விடும்.

நிறைவடையும் (நிச்சயமாக நிறைவேறும்) வாக்சக்தியை உடைய துறவிகளுடைய சிறப்பை இப்பூமியின்கண் அவர்கள் கூறிய வேதமொழியே கண்கூடாக (பயனைக் கொடுத்து) உணர்த்திவிடுகின்றன.





நிறைமொழி = பொய்யாகாத வாக்கு

மறைமொழி = வேத மந்த்ரங்கள்

(வெளிப்படையாகத் தெரியாத நுண்ணிய பொருளையுடைய சொற்கள்)

நிறைமொழி மாந்தர் ஆணையில் கிளந்த மறைமொழி தானே மந்திரம் என்ப - தொல்காப்பியம்.

துறந்தவருடைய பெருமையை அவர்கள் கூறிய வாழ்க்கைக்குப் பயன் தரும் சொற்கள் காட்டுகின்றன.






தேவாரம்



திருக்குறள்/THIRUKKURAL

# 9. குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி கணமேயும் காத்தல் அரிது.

நற்குணங்கள் எனும் (அசையாத, உயர்வுமிக்க) குன்றின் உச்சியில் இருக்கும் துறவியரது (அநாதியான வாஸனையினால் எழும் நியாயமான) கோபமானது கண நேரமே இருந்தாலும் வெகுளப்பட்டவரால் (அதன் விளைவுகளைத்) தடுத்தல் இயலாதாம்.



▶▶▶▶

குணம் = ஜாதி ஒருமை

நற்குணங்கள் = துறவு, மெய்யுணர்வு, பற்றின்மை போன்ற ஞானகுணங்கள்

வெகுளி = கோபம்

கணம் = க்ஷண நேரம்

அசைதல் இல்லாமை, உயர்வாய் கம்பீரமாய் இருத்தல் போன்றவைகளால் குணங்கள் மலையாக உருவகப்படுத்தப்பட்டன. (ஹேது உருவக அலங்காரம்)

முனிவர்களது சொற்கள் மட்டுமல்ல உணர்வுகளும் மெய்யான பலனைத் தரவல்லவை.

## 10. அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
## செந்தண்மை பூண்டொழுக லான்.

எல்லா உயிர்களிடத்தும் சிறந்த குளிர்ந்த அருளை உடையவர்களாக இருத்தலை விரதமாகக் கொண்டு வாழ்வதால் துறவறத்தவர்கள் அந்தணர் எனப்படுவர்.





அந்தணர் = அழகிய தட்பத்தை (குளிர்ந்த அருள்) உடையவர். (காரணப் பெயர்)

(அந்தணர் = அந்தத்தை அணவுவார் = வேதாந்தத்தைப் பொருளென்று மேற்கொண்டு பார்ப்பார் - நச்சினார்க்கினியர்)

அறவோர் = துறவறத்தை பின்பற்றுபவர்

செந்தண்மை = செவ்வையான அருள் (பிரதிபலன் எதிர்பார்க்காத அன்பு)



(சாபம் கொடுக்கும் வல்லமை உடையவர் என்றாலும்)

எல்லா உயிர்களிடமும் ஸமமான அன்புடையவர், அன்பு கொண்டிருத்தலையே விரதமாகக் கொண்டிருப்பவர் என்பது துறந்தார் பெருமைகளுள் சிறந்தது.



1. Youtube Channels:

   Swami Omkarananda


   Vedapuri Events

2. Instagram - swami om karananda

3. Facebook - Swami omkarananda

4. Facebook Group - Theni Swami Chidbhavananda Ashramam

5. Whatsapp Channel - Theni Swami Chidbhavananda Ashramam



94430 51910 www.vedaneri.org thirukkuralclasses@gmail.com